மாதர் போதினி

No. 249 செப்டெம்பர் 1918 No. 9

FOR ME TO LIVE IS CHRIST

கிறிஸ்து எனக்கு ஜீவன்

நாம் மரித்தாலும் பிழைத்தாலும் கிறிஸ்துவினுடையவர்கள் என்பது ஒரு அருமையான சத்தியம். இதை உண்மையாய் அறிந்துகொண்டவர்களுக்கு மரணத்தைப்பற்றிய பயங்கரம் அற்றுப்போம். உயிரோடிருப்போரும் மரித்தோரும் கிறிஸ்துவுடனே கூட ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்படுங் காலம் வரும்பரியந்தம் மரணவாசல் வழியாகவே நாம் நித்தியஜீவனுக்குட் பிரவேசிக்க வேண்டியது. மரணத்துக்குத் தப்ப எவராலும் கூடாதென்பது சகல மதத்தாரும் அறிந்த சத்தியமானாலும், மரணத்திற்கு எதிர்பார்த்திருந்து மகிழ்ச்சியோடு அதின் வழியாய்ப் பிரவேசிப்பது கிறிஸ்தவன் மாத்திரமே.

ஓர் உண்மையான கிறிஸ்தவனுக்கு சரீரத்தோடிருப்பதும் சரீரத்தைவிட்டுப் பிரிவதும் ஒன்றுதான். ஏனெனில், அவன் எந்த நிலைமையிலிருந்தாலும் கிறிஸ்துவைவிட்டுப் பிரியாதவன். மரணமோ, வேறெதுவோ அவனைக் கிறிஸ்துவைவிட்டுப் பிரிக்கமாட்டாது. ரோம. 8: 36–39 பார்க்க. சரீரத்தோடிருக்கையில் கிறிஸ்து அவனில் வாசமாயிருக்கிறார். அவன் சரீரம் கிறிஸ்துவின் ஆலயமாயிருப்பதால், கிறிஸ்துவின் ஆவியால் மாம்சம் ஜெயிக்கப்பட்டு ஆவிக்குரிய ஜீவியஞ் செய்கிறான். சரீரத்தோடிருப்பது அவன் பிறருக்கு உதவிசெய்ய ஏதுவாயிருப்பதால் அதில் மகிழ்ச்சிகொண்டு எல்லாவற்றிலும் ஸ்தோத்திரஞ் செலுத்தி ஸ்துதி ஜீவியஞ் செய்கிறான். சரீரத்தைவிட்டுப் பிரிந்தால் கிறிஸ்துவை முகமுகமாய்க் கண்டு அவரோடே வசிக்கலாமென்று மரணத்தை விருப்போடு எதிர்பார்க்கிறான். சரீரத்தோடிருந்தாலும் பிறருக்கு உபயோகமாயிருக்கலாம், அப்படியிருப்பதால் கிறிஸ்துவுக்கு ஊழியஞ் செய்யலாம். ஏனெ

னில், சிறியரில் ஒருவனுக்குச் செய்த உபகாரம் தமக்குச் செய்யப் பட்டதென்று கிறிஸ்து கூறுகிறாரே என்றெண்ணி, சரீரத்தோடிருக்கையிலும் திருப்தியாயிருக்கிறான்.

கிறிஸ்தவன் மரணத்தை வாஞ்சையோடு எதிர்பார்ப்பதேன்? மரணத்தோடு துக்கம், துன்பம், தொல்லை, பாவம் முடிவடைகிறது. சரீரம் கிறிஸ்துவின் சாயலாக மறுரூபமாகிறது. கிறிஸ்து மரணத்தை ஜெயித்து உயிர்த்தெழுந்ததால், உயிர்த்தெழுதலைப் பற்றிய நம்பிக்கையுண்டாயிருக்கிறது. 1 கொரி. 15-ம் அதிகாரம் பார்க்க. பரலோகத்திற்குப் போவது மாத்திரமல்ல, பரலோகத்தில் கிறிஸ்துவோடிருப்பதே மறுமையைப்பற்றி நமக்கிருக்கும் பாக்கியமான நம்பிக்கை.

வெளி. 7 : 13–17உம் 21-ம் 22-ம் அதிகாரங்களும் வாசிக்க.

TEMPERANCE

குடியரைச் சீர்ப்படுத்தும் வகை

அதிக நாளாக மதுவகைகள் சாப்பிட்டுப் பழக்கப்பட்டவர்களை அவ்வழக்கத்தினின்று மறக்கடிக்கக் கைகண்ட வகை ஒன்று பிகாரோ பத்திரிகை சொல்லியது. குடியரென்று ஊரறிய எவரும் தூறுசொல்லும் மனுஷருக்குத் திராக்ஷரசம் மிதந்தப்பிக் குடிக்கக் கொடுத்துவந்தால், அப்புறம் அவர்கள் மதுவகை ஒன்றையும் திரும்பியும் பாரார்கள். ஸ்வேதேன், நோர்வை தேசங்களில் மதுபானப் பிரியருக்குத் துரைத்தனத்தார் செய்யும் சிட்சை இதுதான். வெறிக்கக்குடித்து விபரீதமாய் நடப்பவர்களை அத்தேசத்தில் கைதுசெய்து காவற்சாலையில் வைப்பார்கள். சிறையிருக்கும்பொழுது அவர்களுக்குக் காலை மாலை இருபொழுதும், ரொட்டியும் திராக்ஷரசமும் அன்றி மற்றொன்றும் கொடுக்கிறதில்லை. ரொட்டியை ஒருமணி நேரம் திராக்ஷரசத்தில் ஊறவைத்து எடுத்துக் கொடுப்பார்கள். முதல்முறை கொடுக்கும்பொழுது கைதி அதைப் பிரியமாய் வாங்கிப் புசிப்பான். இரண்டாம், மூன்றாம் முறை அவனுக்கு அதில் அத்தனை பிரீதி உண்டாகாது. அப்புறம் அந்த ரொட்டியைப் புசிப்பது அவனைக் கொல்லுவதுபோலிருக்கும். சிறைச்சாலை அதிகாரி அவனை வருந்தி பலவந்தம்பண்ணி உண்ணுவிக்க நேரிடும். எட்டு அல்லது பத்து தினம் இவ்வகை உண்டி உட்கொண்டதின்பின் கள், சாராயம் முதலிய லாகிரி வஸ்துக்கள் மணந்தாலும் அவனுக்குக் குடலைப்புரட்டி வாந்தி எடுக்கும். சிறைச்சாலையில் இவ்வாறு சில

தினம் இருந்து சிர்ப்பட்ட குடியர் சிறைநீங்கி அவரவர் வீட்டுக்குத் திரும்பிப் போனபின், மீளவும் குடியரென்று பெயர் எடுக்கக் கண்டதும் கேட்டதுமில்லையென மேற்படி பத்திரிகை சொல்லுகிறது.

CHILDREN'S PAGE

A NOBLE REVENGE

ஒரு நாய் பழிவாங்கின விதம்

பிரான்சியாவில் வியெற்க என்ற இடத்திற்குச் சமீபமாய் மொசெல் நதியில் அன்றொரு நாள் ஓர் அதிசய சங்கதி நடந்தது. ஹர்ஷிமிட் என்று பெயருள்ள ஒருவனுக்கு ஒரு நாய் இருந்தது. அவன் அதைக் கொல்ல யோசித்து, வள்ளத்தில் ஏற்றி நட்டாற்றில் தள்ளிக்கொண்டுபோய் ஒரு கல்லை அதின் கழுத்தில் கட்டி அதைத் தண்ணீரில் தூக்கி எறிந்தான். நாய் உடனே அமிழ்ந்தியும், அவஸ்தையினால் காலடித்துத் துடிக்கையில் கயிறு உருவிக் கல் விழுந்து போக, அச்செந்து தண்ணீருக்குமேல் எழும்பி நீந்திப்போய் வள்ளத்தில் ஏறத்தொடங்கிற்று. உடையவன் அதை ஏறவொட்டாமல் பிடித்துத் தள்ளத் தள்ள, நாய் பின்னும் பின்னும் ஓடிவந்ததினால் அவன் கோபப்பிராந்தனாகி, தன் கையிலிருந்த துடுப்பினால் அதை ஓங்கி அடிக்கவே, தானே நிலைதவறித் தண்ணீரில் விழுந்தான். அவன் நீந்தக்கூடாதவனாய் அமிழ, நாய் அவன் சட்டையைக் கவ்விப் பிடித்துக்கொண்டு நீந்தி, நீரோட்டத்தினால் பலவிசை அலையுண்டும் கடைசியில் க்ஷேமமாய் அவனைக் கரைசேர்த்தது. இவ்வாறு தன் பிராணனை ரட்சித்த நாயை அப்புறம் அவன் கொல்வானா?

யானை யனையார் நண்பொரீஇ நாயனையார்
கேண்மை கெழீஇக் கொளல்வேண்டும்—யானை
யறிந்தறிந்தும் பாகனையே கொல்லு மெறிந்தவேல்
மெய்யதாவால் குழைக்கு நாய்.

FORGIVENESS

மன்னிப்பின் பலன்

உயர்ந்த பதவியிலிருந்த ஓர் அரசனுக்கு அவசரத்தினிமித்தம் ஓர் வர்த்தகன் லட்சம் ரூபாய் கடன் கொடுத்தான். மேற்படி தொகையைத் திரும்பக் கொடுக்கவேண்டிய நாள் வந்தது. கொடுக்

நவோ இராஜனுக்குத் திராணியில்லை. கடன் சங்கதியை இராஜ குடும்பத்தாரும் ஆலோசனைச் சங்கத்தாரும் அறிந்தால் அதிக துக்கப் படுவார்களே என்று மனக்கலக்கமுள்ளவனாய் இருந்தான். கடன் கொடுத்தவன் இராஜனைத் தன் வீட்டில் விருந்துக்கு அழைத்துச் சந்தனக்கட்டைகளையும் இன்னும் மற்ற வாசனைத்திரவியங்களையும் ஏராளமாய்ச் செலவழித்து, வெகுதூரம் சுகந்த பரிமளம் வீசும்படி செய்தான். விருந்தினர் மத்தியில் ஓர்வேளை மேற்படி சங்கதியை விளம்பரம் செய்விப்பானோவென்று அவ்வரசன் மனக்கலக்கங் கொண்டிருந்தான். அவன் எண்ணியிருந்ததைவிட நூறு மடங்கு அதிகமாய் விருந்து வெகு சம்பிரமமாய் நடந்தது. இவ்விருந்தில் யாவரும் விநோத காரியங்களைப் பார்ப்பதிலும் விசித்திரமான பல சங்கதிகளைக் கேட்பதிலும் சந்தஷ்டியடைந்திருக்கையில், அரச னுடைய மனம்மட்டும் கடன் சங்கதியை நினைத்து நினைத்து கலக் கங்கொண்டிருந்தது. இத்தருணத்தில் வர்த்தகன் சமீபத்திலிருந்த ஓரறைக்குட்சென்று முன் அரசன் எழுதிக்கொடுத்த கடன் முறி யைக் கொண்டுவந்து அரசன் கண்முன்னிலையில் அதைக் கொளுத்தி விட்டு அரசனைத் தனியாய் அழைத்து 'உம்முடைய கடன் இன் றோடு தீர்ந்தது. நீர் போய்ச் சந்தோஷமாயிரும்' என்று சொன் னான்.

A CURE TO ANGER

கோபம் குணப்படும் வழி

அவசியமில்லாமல் அநேகர் முகம் கழுவும்போது கண்ணாடி யைப் பார்க்கிறார்கள். கோபத்தினால் முகரூபு வேறுபட்டு ஒழுங் கீனமாயிருக்குந் தருணத்தில் கண்ணாடியைப் பார்த்தால், தானே வெட்கப்பட்டுச் சீரடைய ஏதுவுண்டு. உக்கிர கோபிக்கு அக்கினி பறக்கும் கண்கள், கொன்னையாய்ப் பேசும் நாவு, பற்கடிப்பு, மனக்கொதிப்பு இவைகளால் சரீரகசிவு காய்ந்துபோய், ஒரு அங் கத்தின் உறுப்பு முதலாய்த் தன்தன் வேலையைச் செய்ய ஏதுவற்று எல்லாம் மாறிநிற்கும்.

அடுத்தது காட்டும் பளிங்குபோ னெஞ்சங்—
கடுத்தது காட்டு முகம்.
கதங்காத்து கற்றடங்க லாற்றுவான் செவ்வி—
யறம்பார்க்கு மாற்றி னுழைந்து.



CHRIST AT THE WEDDING HOUSE

கிறிஸ்து கலியாணவீட்டில்

'ஒவ்வொன்று இரண்டு......ஆறு கற்சாடிகள் அங்கே வைத்திருந்தது.'

கானாவூர்க் கலியாணத்தை நினையாத கிறிஸ்தவக் கலியாணம் ஒன்றுமில்லை. கானாவூர்க் கலியாணவீட்டிலிருந்த ஆறு கற்சாடிகளிலுண்டான அற்புதத் திராட்சரசம் அம்மணத்துக்கு வந்தவர்களுக்கு 'மகிழ்ச்சியைத் தரும்' பானமாயிருந்து அப்போதே செலவாகிப்போயிற்று. அந்தக் கற்சாடிகளும் இப்பொழுதில்லை. ஆயினும் நற்போதகமாகிய தேவாமிர்தம் நிறைந்த வேறு ஆறு கற்சாடிகள் அந்த மணவீட்டில் இருந்தன. அவைகளொவ்வொன்றிலிருந்தும் நாம் இன்று ஞானரசம் வார்த்துச் சாப்பிட்டு ஞான மகிழ்ச்சியடைவோமாக :

I–வது கற்சாடி, கிறிஸ்துநாதர்.

அந்தக் கலியாண சம்பந்தமாக அவர் நமக்குத் தருகிற போதனு ரசமென்ன ?

(a) அவர் சமையசகாயர்.—நடுக்கலியாணத்தில் எங்கே ஓடிப் போய் ரசம் வாங்கிக்கொண்டு திரிய? சிலர் சாப்பிட்

டும் சிலர் சாப்பிடாமலும் இருக்கிற தறிவேளையில் யார் மரியாதையைக் காப்பார்? இவரல்லவா?

முற்றும் செலவாகுந்தனையும், படகு அமிழத் துவக்குந் தனையும், அக்கினிச்சூளையிற் போடப்படுந்தனையும் தாமதித்து ஆபத்தினடுவில் உதவிசெய்யத தீவிரிக்கிறவர்.

(b) அவர் இகபரவின்ப பரிபாலர்.—கலியாணவீட்டில் இருக்கும் களிப்பு, கூட்டுறவு, தேசாசாரம், விருந்துபசரணை முதலிய வைபவங்களைக் கிறிஸ்துநாதர் தடுக்கிறதில்லை. அதற்கனுமதியும் உதவியும் புரிகிறார். இந்த இகவின்பத்தையும் தந்து பரத்துக்குரிய நித்திய விவாக பரமானந்தத்தையும் தருவதற்கு விரும்பி, நம்மைக் கலியாண வஸ்திரம் தரித்துக்கொண்டும், எரிகிற தீவட்டிகளைப் பிடித்துக்கொண்டும் தமது மோட்சமணவறைக்கு வர அழைக்கிறார்.

II-வது கற்சாடி, மரியம்மாள்.

இந்தக் கலியாணத்தில் அவர்களிடம் காணப்பட்ட குணசீலங்களைப் பார்.

(1) பிறர் சஞ்சலப்படுவதைப் பார்க்க மனந்தாளாத சீமாட்டி.—கலியாணவீட்டிற்கு வருகிறவர்கள் குறைகூறிக்கொண்டிருப்பது நம் நாட்டுவழக்கம். இவ்வம்மையோ கலியாணவீட்டார்க்கு நிந்தை வராது காக்கமுயன்றனர். தன் பிள்ளைபோலவே இந்தத் தாய்—இந்தத் தாய்போலவே இவர்கள் பிள்ளை.

(2) சுருக்கச்செபம் பெருக்கப்பொருள்.— 'அவர்களுக்குத் திராட்சரசம் இல்லை'—எனக்கு அது இது இல்லை என்று ஒருநாளுங் கேட்டதில்லை. 'அவர்களுக்கு இல்லை'—மற்றவர்களுக்காகவே முதற்கவலை. 'அவர்களுக்கு திராட்சரசம் இல்லை'—அவர்களுக்கு மகிழ்ச்சி இல்லை, காயம் ஆற்றும் ரசம் இல்லை, நல்லாவி இல்லை, பரிசுத்த ஐக்கியப்பந்தி இல்லை என்பதை யொக்கும்.

(3) உடனே உத்தரவு கிடையாவிடினும் தளர்ச்சியடையவில்லை.

III-வது கற்சாடி, இயேசுவின் சீஷர்.

முதலாம் அற்புதங் கண்டமாத்திரத்தில் அவரிடத்தில் விசுவாசம் வைத்தார்களாம். நாம் கிறிஸ்துவிடத்தில் எத்தனை அற்புதம், எத்தனை உவமை, எத்தனை இரட்சண்யச்செய்தி கேட்டிருக்கிறோம், விசுவாசிகளாகிவிட்டோமா?

IV-வது கற்சாடி, கானுமணத் தம்பதிகள்.

அவர்கள் கிறிஸ்துவையும் அவர் ஊழியரையும் அவர் தாயரையும் அழைத்தார்கள். அவர்கள் கலியாணப்பந்தல் பக்திமான்களால் நிறைந்தது. அவர்களுடைய சாடிகள் இனி எப்போதும் நிரம்பியிருக்கும். எண்ணெயும் மாவும் வற்றாமலே இருக்கும். அவர்கள் மங்களமே மங்களம். தங்கள் கலியாணத்தினம் வரும்போதெல்லாம் வருஷாவருஷம் அற்புதநாதனை அகத்தியம் நினைப்பார்கள். ஆ! அவர்கள் ஜீவியம் அப்புறம் எத்தனை இன்பமும் பரிசுத்தமுமாய் இருந்திருக்கும்!

V-வது கற்சாடி, பந்தி விசாரிப்புக்காரன்.

அவன் வார்த்தைகள் எத்தனை உண்மையானது! 'எந்த மனுஷனும் முன்பு...பின்பு...நீரோ நல்லரசத்தை.........வைத்திருந்தீரே என்றான்.'—உலகமும் பசாசும் முதலில் இன்பந்தந்து கடைசியில் துன்பந்தரும்—கிறிஸ்துவோ கடைசிமட்டும் நன்மையும் இன்பமுந் தருகிறவர்.

VI-வது கற்சாடி, வேலைக்காரர்.

(1) மரியாளும் இயேசுவும் அவர்களுக்கு எஜமான்களல்ல. ஆயினும் அவர்கள் உடனே கீழ்ப்படிந்தார்கள். கீழ்ப்படிதலே கிறிஸ்தவன் குணம்.

(2) திராட்சரசச் சாடிகளில் தண்ணீர் நிரப்புவானேன்? என்று குதர்க்கம் பேசவில்லை.

(3) விசுவாசித்தார்கள்—'இப்பொழுது மொண்டு' என்று கர்த்தர் உச்சரித்த பதங்களின் சக்தியை விசுவாசித்தார்கள். புதுமை நடக்கும் என்று நம்பிக்கொண்டு போனபோது வழியிலே அற்புதம் நடந்தது. பத்து குஷ்டர்போல பரி. நற்கருணை வாங்க வருபவர் இந்த வேலைக்காரருக்கிருந்த விசுவாசம் உங்களுக்கு இயேசுவின் வார்த்தையில் இருக்கவேண்டாமா?

Rev. C. P. Gnanamani.

MESOPOTAMIA

மெசொப்பொத்தாமியா

வேதாகம சரித்திரமடங்கிய ஸ்தலங்களில் மெசொப்பொத்தாமியா வொன்று. இந்த வேதாகம ஸ்தலத்தைப் பரிசுத்த ஸ்தலமென்றும் அழைக்கலாம். இத்தேசத்திற்கு மெசொப்பொத்தாமியாவென்று பேர் வழங்கின காரணம் யாதெனில், 'நதிகளின் மத்தியிலுள்ள ஸ்தலம்' என்று அர்த்தங்கொள்ளும் கிரேக்கவார்த்தையினிமித்தமே.

இந்நதிகளின் பேர் இதெக்கேல், ஐபிராத்து. இவை ஏதேன் தோட்டத்திலிருந்து பிரிந்தோடின நதிகளில் இரண்டு. தற்காலத்தில் இதெக்கேல் என்ற ஆற்றுக்கு தைகிரீஸ் என்று பேர் வழங்கிவருகிறது. 'தைகிரீஸ்' என்கிற பதத்துக்கு அரபிபாஷையில் 'அம்பு' என்று அர்த்தமாம். அந்த ஆற்றின் தண்ணீர் அம்பைப்போல் அதிவேகமாய்ப் பாய்ந்தோடுவதால் அதற்கு இந்தப்பேர் வந்தது.

பரி. வேதாகமத்தின் சில மூலாதாரச் சரித்திரங்களும் சம்பவங்களும், இத்தேசத்திலே ஆரம்பமாயின. ஆதிசிருஷ்டிப்பின் இப்பூர்வீக ஸ்தலம், கீழ் மெசொப்பொத்தாமியா, மேல் மெசொப்பொத்தாமியா வென்று இரண்டு பாகங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. இந்தக் கீழ்பாகத்தில்தான் ஏதேன் தோட்டம் உற்பத்தியானது என்று சொல்லுகிறார்கள். ஆனால், நமக்குத் தெரிந்திருக்கிறபடி, அத்தோட்டம் உருவாக்கப்பட்டு அநேக ஆயிர வருஷக்காலங்களாகிறதால், அத்தோட்டத்தின் சம்பந்தமான எந்தக்குறிப்பும் தற்காலத்தில் அவ்விடத்தில் காணப்படவில்லை. ஆனால் அங்கே ஒரு விருட்சமுண்டு. அதை நன்மை தீமை அறியத்தக்க விருட்சமென்று சொல்லுகிறார்கள். இது நம்பப்படத்தக்கதல்ல. தற்காலத்தில் இவ்விடத்திற்குச் சமீபத்தில், கொர்னுவென்று ஓர் சிறிய ஊர் உண்டு. இவ்வூரின் அடிவாரத்தில்தான் ஐபிராத்தும் தைகிரீசும் சந்திக்கின்றன.

இந்த ஐபிராத்து நதியிலிருந்து நசரியாவுக்கு ரெயில் மார்க்கமாய்ப் போகையில் அரபி வனாந்தரத்தின் ஓரமாய்த்தான் செல்லவேண்டும். அந்நகரத்தின் சமீபத்தில் நம்முடைய முற்பிதாவாகிய ஆபிரகாமின் ஜந்மபூமியாகிய ஊர் என்கிற கல்தேயப் பட்டணமுண்டு. 'ஊர்' என்கிற இந்தப் பதம், நமது பாஷையில் 'ஊர்' என்கிற அர்த்தமேகொள்ளும். ஆபிரகாமின் காலத்தில் கல்தேய தேசத்துப் பட்டணங்களாகிய பாபிலோன் முதலிய சிறந்த இடங்களைவிட இந்த 'ஊர்' என்கிற நகரம் விசேஷித்த இடமாயிருந்திருக்கவேண்டும். ஆகையால்தான் அதற்கு 'ஊர்' என்கிற பேர் வந்திருக்கலாம். இந்த புராதனப்பட்டணம் இப்போது பாழாய்க்கிடந்தாலும், சென்ற சில வருஷகாலங்களாக அது தோண்டப்பட்டு சில ஆச்சரியமான காரியங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. இதின் ஆராய்ச்சி இன்னும் முடியவில்லை.

ஐபிராத்து ஆற்றின் வழியாய் நசரியாவைக் கடந்து மேலே சென்றால், பாழாய்ப்போன பாபிலோன் பட்டணத்தினிடத்தைப் பார்க்கலாம். நாங்கள் அந்நதியோரங்களில் பிரயாணம் செய்தபோது, ஆதிகாலத்தில் இஸ்ரவேல் ஜனங்கள் சிறைப்பட்டு வந்த

போது 'பாபிலோன் ஆறுகளருகே நாங்கள் உட்கார்ந்து, அங்கே சீயோனை நினைத்து அழுதோம்' என்கிற துக்கவாசகம் எங்கள் மனதிற்கு எவ்வளவோ பிரத்தியட்சமாய்த் தோன்றிற்று. அழிந்துபோன மகாநகரமாகிய பாபிலோன் சென்ற சில வருஷங்களாக அடிவாரம் முதற்கொண்டு தோண்டப்பட்டு, அதில் அநேக அபூர்வமான காரியங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. நேபுகாத்நேச்சார் ராஜாவின் காலத்திலிருந்த அரண்மனைகள் கோட்டை கோபுரங்கள் முதலிய அலங்காரமான கட்டுக்கோப்புகள் சம்பந்தமாய் சில விநோதமான காரியங்களும் கண்டுபிடிக்கப்பட்டன. அக்கட்டடங்களில் உபயோகிக்கப்பட்ட செங்கற்கள் இன்னும் பலமுள்ளவைகளாக தற்காலத்து கட்டடங்களுக்குப உபயோகிக்கப்படுகின்றன. மெசொப்பொத்தாமியாவின் அடிபாகமாகிய பஸ்ராவுக்கு தற்காலத்தில் பிரதான தளகர்த்தனாயிருக்கிற சர் ஜார்ஜ் மக்மன். என்பவர், கொஞ்சகாலத்துக்குமுன் பாபிலோனில் தாம் கண்டெடுத்த, அசீரிய பாஷையின் அக்ஷரங்களடங்கிய இரண்டு செங்கற்களை எங்களுக்குக் காண்பித்தார்.

இந்த பாபிலோன் சமீபத்தில்தான் அழிந்துபோன பாபேல் கோபுரத்தினிடமிருக்கிறது. இதுதான் நமது வேதாகமத்தில் சொல்லப்பட்டிருக்கிற சிநெயார் தேசத்தின் ஒரு பாகம். பூமியெங்கும் ஒரேபாஷையும், ஒரேவிதமான பேச்சும் இருப்பது நன்மையோ, அல்லது பற்பல பாஷைகளும் அவைகளின் [illegible]மையும் சிறப்பும் நன்மையோ? இவ்வித்தியாசத்திற்கு பாபேலே காரணம். ஆதி காலத்தில் பாபிலோனுக்குச் சிறை[illegible] யூதர்களில் எருசலேமுக்குத் திரும்பினவர்கள் தவிர, மற்றவர்கள் மெசொப்பொத்தாமியாவின் பற்பல இடங்களில் பரம்பி இருக்கிறார்கள். அவர்களின் தற்காலத்துத் தொகை சற்றேறக்குறைய எண்பதினாயிரம்பேர். பாபிலோனுக்குச் சமீபத்திலுள்ள பாக்டாடில்மாத்திரம் சற்றேறக்குறைய அறுபதினாயிரம்பேர் இருக்கிறார்கள். அழிந்துபோன பாபிலோன் நகரத்தின்மேல் 'ஹில்லா' என்னப்பட்ட ஒரு சிறிய மகம்மதிய கிராமமுண்டு. பாபிலோன் நகரத்தின் சமீபத்தில் மகம்மதியருக்குப் பேர்போன 'கர்பில' என்னப்பட்ட ஒரு பட்டணமுண்டு. இது மகம்மதியருக்குள் 'ஷேக்' என்ற வகுப்பாருக்குப் பரிசுத்த ஸ்தலம். மகம்மதியருடைய மொஹரம் பண்டிகை இந்நகரத்தில்தான் ஆரம்பமாயிற்று. இவ்விடத்திலிருந்து மகம்மதியர் தங்கள் ஜெபத்திற்கு ஊக்கத்தைக் கொடுக்க ஜெபக்கல்லை எடுத்துப்போவார்கள். அத்தேசத்தில் அநேக மகம்மதியர் தங்கள் கைகளில் ஓர்வகையான ஜெபமாலையும் வைத்திருப்பது வழக்கம். கிறிஸ்தவர்களாகிய நமக்கோ, நமது இயேசுரட்சகரே ஜெபக்கல்லும் ஜெபமாலையுமாய்

இருக்கிறார். பாபிலோனுக்கு மேல்பக்கத்தில் எசேக்கியேல் தீர்க்கதரிசியின் கல்லறையுண்டு. இது யூதருக்குப் பெரிய யாத்திரை ஸ்தலம்.

ஐபிராத்தைவிட்டு தைகிரீஸ்நதி முகத்துவாரத்தின் கிழக்கே வந்தால் எஸ்தர் ராணியோடு சம்பந்தப்பட்ட சூசான் அரண்மனையின் பாழ்நிலங்களிருக்கின்றன. அவைகளும் ஆராய்ச்சி செய்யப்படுகின்றன. அவற்றின் சமீபத்தில் தானியேல் தீர்க்கதரிசியின் சமாதியுண்டு. இந்த தைகிரீஸ் ஆகிய இதெக்கேல் ஆற்றின்மேல் போகும்போது அதின் இடதுபக்கத்தில் எஸ்றா தீர்க்கதரிசியின் கல்லறை அதிக அலங்காரமாக கோபுரப்போங்காய்க் கட்டப்பட்டிருக்கிறது. அங்கு யூதர், மகம்மதியா, கிறிஸ்தவர்கள் ஆகிய இம்மூன்று மார்க்கத்தாரும் ஒருவிதமாக, பழைய ஏற்பாட்டின் மூலமாய் சம்பந்தப்பட்டிருக்கிறார்களென்று அறியத்தக்கதாக, மேற்படி மூன்று சமயத்தைச் சேர்ந்த சன்னியாசிகள் கல்லறையைச் சுற்றிக்கொண்டிருக்கிறார்கள். அந்த மூன்று மார்க்கத்தார் அதை யாத்திரைஸ்தலமாகவும் உபயோகிக்கிறார்கள். இன்னும் அந்நதியின்மேலே சென்றால் இடதுபக்கதில் செலூசியா பட்டணத்தின் பாழான இடங்களும், வலதுபக்கதில் சிடெசிபன் என்கிற இடமும் உண்டு. இவைகள் பெரிய அலெக்சாந்தரோடு சம்பந்தப்பட்டிருக்கின்றன. மேற்கண்ட பட்டணத்திலிருந்துதான் இப்பெரிய தளகர்த்தன் இந்தியாதேசத்திலுள்ள சந்திரகுப்த ராஜாவுக்கு ஸ்தானாபதியை அனுப்பினான்.

[illegible]பின்மேல் இன்னும் சென்றால், கிழக்கத்து தூர்க்கிய தேசத்துத் தலைநகரமாகிய பாக்டாட் [illegible] இருக்கிறது. 'தூர்க்கியர் காலின்கீழ் யாதொன்றும் வளராது' என்ற வழக்கச்சொற்படி இந்தப் பெரிய பட்டணத்தின் மேன்மையும் மகிமையும் தற்காலத்தில் குன்றிப்போய்விட்டது. ஒருகாலத்தில் பாக்டாட், கிழக்கத்தி சபைக்குப் பிரதான அத்தியக்ஷராகிய பாத்திரியார்க்கின் ஸ்தானமாய் இருந்தது. ஆனால் தற்காலத்தில் அது சீரிய சபையைச்சேர்ந்த ஒரு அத்தியக்ஷ ஆதீனமாயிருக்கிறது. அப்பட்டணத்தில் கல்தேய, சீரிய, ஆர்மீனிய கிறிஸ்தவர்களின் தொகை பத்தாயிரம். இங்கிலாந்து திருச்சபையைச்சேர்ந்த ஒரு சிறிய சீரிய கிறிஸ்தவசபை சி. எம் எஸ். மிஷன் சம்பந்தமாக இருக்கிறது. அந்த மிஷன் ஸ்தாபிக்கப்பட்டு முப்பது வருஷங்களாயினும், இரண்டு வருஷத்துக்கு முன் தான், கனம்: நாகப்பூர் அத்தியக்ஷரவர்கள் சண்டையின் சம்பந்தமாக போனசமயத்தில் ஒருமுறை திடப்படுத்தல் ஆராதனை நடத்தப்பட்டது. அதற்குமுன் அவ்விடத்தில் எந்த அங்கிலேய அத்தியக்ஷருடைய சந்திப்பும் இருந்ததில்லை. இது எருசலேம் அத்தியக்ஷ

ஆதீனத்திற்கு சமீபமாயிருந்தாலும் அதற்குட்படாமல், லண்டன் பட்டணத்து அத்தியக்ஷ ஆதீனத்துக்குள்ளிருக்கிறது! இந்தச் சபை ஒரு கிறிஸ்தவ வீட்டில் கூடுகிறது. அந்த வீட்டிலே தங்களுடைய் போஜனத்துக்கென்று செய்யப்படுகிற மெல்லிய அப்பளம்போன்ற அப்பமும், அங்குள்ள கிறிஸ்தவர்களால் செய்யப்படும் திராட்சரசமும், கர்த்தருடைய பரி. ராப்போஜனத்துக்கு உபயோகப்படுகின்றன. அவ்வூரில் திராட்சப்பழப் மிகுதியாயிருப்பதினால், அப்பழத்தின் ரசம் எளிதாய்க் கிடைக்கும். அநேக வீடுகளில் திராட்சப்பழப் பந்தல்களைப் பார்க்கலாம். இந்தப் பழத்தோடுகூட மற்ற கனிவர்க்கங்களில் மிகுத்திருப்பது பேரீச்சம்பழம்.

பாக்டாட் பட்டணம் நமது ராஜாங்கத்தார் கையில் இலகுவாய் விழுந்தது ஆச்சரியம். தற்கால யுத்தசம்பந்தமாக அங்கத்தின் பற்பல விடங்களில், கூடாரங்களிலும் சாதாரண கட்டடங்களிலும், கிறிஸ்தவ போர்ச்சேவகர்களுக்கும் மற்றவர்களுக்கும் ஆராதனைகள் ஒழுங்காய் நடத்தப்பட்டுவருகின்றன. அப்படிப்பட்ட ஒரு கட்டடத்திலே ஆங்கிலேய திருச்சபை ஆராதனைகளும், வெஸ்லியன், பாப்டிஸ்ட், மெதடிஸ்ட் முதலியவர்களின் ஆராதனைகளும், ரோமான் மார்க்கத்தார் ஆராதனைகளும், பிரெஸ்பிற்றிரியன் ஆராதனைகளும், ஆக ஒரேநாளில் ஒன்பது ஆராதனைகள், இங்கிலீஷ், லத்தீன், உருது, வெல்ஷ், பஞ்சாபி, தமிழ் முதலிய ஆறு பாஷைகளில் நடத்தப்படுகின்றன. அவ்விடத்திற்கருகே, அதேநாளில், அதேசமயத்தில், அங்குள்ள பற்பல சுதேச கிறிஸ்தவர்களுக்கும், கல்தேய, சீரிய, ஆர்மீனிய, அரபி முதலிய நான்கு பாஷைகளில் ஆராதனைகள் நடத்தப்படுகின்றன. இதை கவனிக்குங்கால் திருச்சபையின் வளர்ச்சிக்கும், தேர்ச்சிக்கும், அது எங்கும் வியாபித்திருக்கிற தன்மைக்கும், ஒரு நல்ல குறிப்பென்று சொல்லலாம். தற்காலத்து யுத்தத்தின் சம்பந்தமாக, பஸ்ராவைச்சேர்ந்த ஒரு இடத்திலேயே, பட்டாளத்து சாப்ளன்மார் நாற்பதுபேருக்குக் குறையாமலிருக்கிறார்கள். ஞாயிற்றுக்கிழமைதோறும் ஒவ்வொருவரும் குறைந்தது இரண்டு அல்லது மூன்று ஆராதனைகளை நடத்திவருகிறார்கள். நான் அடிக்கடி ஒரேநாளில் ஐந்து ஆரோதனைகளை நடத்தவேண்டியதிருந்தது. இவ்விதமாக ஒரேயிடத்தில், ஒரேநாளில், குறைந்தது நூறு ஆராதனைகள் நடத்தப்படுகின்றன. இதன் சம்பந்தமாக, அங்குள்ள இங்கிலீஷ் போர்ச்சேவகர்களுக்கு, அடிக்கடி நமது தென்னிந்தியாவின் மிஷன் வேலையைப்பற்றி, நான் பேசும்படிக்கான சமயத்தையும், சிலாக்கியத்தையும் பெற்றேன். தற்கால யுத்தத்தில் பாக்டாடை மீண்டு, சமாரா என்கிற ஊர்மட்டும் போய், அங்கிருந்து டெக்ரிக் ஊர்வரை

யில் முன்சென்றிருக்கிறோம். அதற்குமேல் சத்துருக்கள் இருக்கிற மோசல் என்னப்பட்ட பட்டணமுண்டு. அதின் சமீபத்தில், பாழாய்ப் போன மகா நகரமாகிய நினிவேபட்டணத்தின் ஸ்தானமிருக்கிறது. இந்த இடத்தில் யோனாவின் மேடு என்றழைக்கப்படுகிற ஒரு உப்பரிகையுண்டு. இதன் சம்பந்தமாகவும் தோண்டி கண்டெடுக்கப்பட்ட அநேக ஆச்சரியமான காரியங்களுமுண்டு. நினிவேயின் அழிந்து போன அரண்மனைகளின் சுற்றளவு நூறு ஏக்கர்கள். அந்த விஸ்தாரமான சுற்றளவு சற்றேறக்குறைய தொண்ணூற்றைந்து அடி உயரம் எழுப்பப்பட்டு, அதின்மேல் அரண்மனைகள் ஆதிகாலத்தில் கட்டப்பட்டன. அவ்வாரண்மனைகளைக் கட்டுமுன், இந்த அகண்ட ஸ்தலத்தை உயர்வான சமமேடாக சமர்ப்பிக்கிறதற்குமாத்திரம், பன்னிரண்டு வருஷங்களுக்கு, பன்னீராயிரம்பேர் வேலை செய்திருக்க வேண்டும். அப்படிப்பட்ட பெரிய மேடுகளை, மெசொப்பொத்தாமியாவின் பற்பல விடங்களில் காணலாம். அவைகளெல்லாம் அநேகம் நமது வேதாகம சரித்திரத்தின் சம்பந்தமாகவே யிருக்கின்றன. இப்படிப்பட்ட மேடான இடம் தென்கீழ் மெசொப்பொத்தாமியாவின் தைகிரீஸ் கரையோரத்திலிருக்கிறது. அந்த உப்பரிகை 'நிம்ரோதை மேடு' என்றழைக்கப்படுகிறது. அந்த மேட்டை அடிவாரத்திலிருந்து பரிசோதித்துப் பார்க்கையில் நிம்ரோதின் சிலையின் தலையைக் கண்டெடுத்தார்கள். அதை அறிந்த அத்தேசத்திலுள்ள அரபியர்கள் அதிக ஆச்சரியப்பட்டார்கள். காரணமென்னவென்றால், மெசொப்பொத்தாமியாவின் பற்பல இடங்களை ஆராய்ச்சி செய்த காலம், சென்ற எண்பது அல்லது தொண்ணூறு வருஷங்களுக்குள்ளாக விருந்தாலும், 'நிம்ரோது' என்ற பேரோ அத்தேசத்திலுள்ள அரபியருக்கு, சென்ற ஆயிர வருஷங்களுக்கு அதிகமாக, பாரம்பரையாய்த் தெரிந்த பெயர். நாம் வேதத்தில் பார்க்கிறபிரகாரமாக, இந்த நிம்ரோது நோவாவின் குடும்பத்தைச் சேர்ந்தவன். இவன் மெசொப்பொத்தாமியாவிலுள்ள பாபேல், ஏர்க் முதலிய தேசங்களுக்கு, ஆதிகாலத்தில் ராஜாவாயிருந்தான். பரி. வேதாகமத்தில் சொல்லியபிரகாரம் இவன் வேட்டையில் பேர்போனவனென்று தற்காலத்திலும் அரபியர் பேசுகிறார்கள். வேத சரித்திரத்தின் இந்த சத்தியம் தற்காலத்து அரபியர்களால் எவ்வளவு நுட்பமாக ரூபகாரப்படுகிறதென்று பார்க்கலாம்.

மெசொப்பொத்தாமியாவில் தோண்டி எடுக்கப்பட்ட ஆராய்ச்சிகளில், களிமண்ணினால் செய்யப்பட்ட சில பெரிய செங்கற்கள் கண்டுபிடிக்கப்பட்டன. அவைகளில் அநேக பழையகாலத்து சரித்திரங்கள் வரையப்பட்டிருக்கின்றன. அப்படிப்பட்ட ஒரு களிமண்

செங்கல்லில், பூர்வகாலத்தில் உண்டான [illegible]. அதின் சம்பந்தமான நோவாவின் சரித்திரமும் வரையப்பட்டிருக்கின்றன. அக்காலத்தில் விக்கிரகாராதனைக்காரராயிருந்த கல்தேயருடைய சரித்திரங்களில் இந்த நமது பூர்வீக வேதாகமசரித்திரம் அடங்கியிருக்கிறது, நமது மார்க்க சத்தியத்தை ஊர்ஜிதப்படுத்துகிறதல்லவா?

அத்தேசத்தின் தற்கால மார்க்கச் சம்பந்தமான சரித்திரத்தைக் கவனிக்குங்கால், அங்கு விக்கிரகாராதனைக்காரரில்லை. மகம்மதியர், யூதர், கிறிஸ்தவர்கள், ஆக இம்மூன்று மார்க்கத்தார்தான் மெசொப்பொத்தாமியாவிலிருக்கிறார்கள். கிறிஸ்தவர்களுக்குள், பொதுவாகச் சொல்லவேண்டுமானால், மூன்று வகுப்பார் உண்டு. அவர்கள் யாரெனில்:—கல்தேயர், சிரியர், ஆர்மீனியர். இவர்களுக்குள், கல்தேய கிறிஸ்தவர்கள் அநேகமாய் ரோமான் சபையோடு ஐக்கியப்பட்டிருக்கிறார்கள். ஆனால் சிரிய, ஆர்மீனிய சபைகளில் ஒரு பாகத்தார்மாத்திரம் ரோமான் சபையைச் சேர்ந்தவர்கள். மற்றவர்கள் 'ஆர்த்தடாக்ஸ்' என்ற சுத்த சத்திய சபையைச் சேர்ந்தவர்கள். இச்சிரிய ஆர்மீனிய சபைகளுக்குப் பிரதான அத்தியக்ஷரைப்போலொத்த பாத்திரியார்க்மார்களுண்டு. சிரிய சபைக்குத் தலைமையானவர் பாபிலோன் பாத்திரியார்க், அவர் ஸ்தானம் அலிப்போ. ஆர்மீனிய சபைத் தலைமையானவர் அந்தியோகியா பாத்திரியார்க், அவர் ஸ்தானம் மோசல்.

தற்கால யுத்தத்தில் ஆர்மீனிய கிறிஸ்தவர்களுக்கு நேரிட்ட துன்பம் கொஞ்சமல்ல. ஆன்வர் பாஷா என்னும் மகம்மதிய கொடுங்கோலனுடைய துர்யோசனையினால், சற்றேறக்குறைய எண்பதினாயிரம் கிறிஸ்தவர்கள் ஒரேகாலத்தில் கொல்லப்பட்டார்கள். ஒரே சமயத்தில் நேரிட்ட இக்கொடூர வதையைப்போல, வேறே எங்கும் எக்காலத்திலும் நடந்ததில்லை. இப்படி கொலைசெய்யப்பட்ட அநேகருடைய பிள்ளைகளும் பெண்களும் அரபியர் வீடுகளில் அடிமைகளாயிருக்கிறார்கள். இக்கிறிஸ்தவப் பிள்ளைகளுடைய நிர்ப்பந்த ஸ்திதி எவ்வளவு பரிதாபம்! இந்நிலமையிலிருந்த அநேகம் பிள்ளைகளையும், பெண்களையும் பாக்டாட்டிலுள்ள நமது இங்கிலீஷ் ராஜாங்கத்தார் பணங்கொடுத்து மீட்டு அவர்களுக்கென்று ஒரு அடைக்கலஸ்தலத்தை ஏற்படுத்தியிருக்கிறார்கள்.

பாக்டாட்டிலுள்ள சில கிறிஸ்தவ ஆலயங்களை, தற்கால யுத்தத்தில், துருக்கர் கொளுத்திவிட்டு ஓடிப்போய்விட்டார்கள். சில ஆலயங்களின் பரிசுத்த ஸ்தலத்தின்மேலே ஒரு கண், அல்லது ஒரு காது, அல்லது சில ஆலயங்களில் இரண்டும் வரையப்பட்டிருக்கின்றன. அவைகளின் அர்த்தமென்னவெனில், ஆராதனைக்கு வருகிற கிறிஸ்

தவர்களைச் ——யும் பார்க்கிறார், கேட்கிறார் என்றும்; அத்துடன் பட்சபாதமில்லாமல் எல்லாரையும் ஒரேகண்ணினால் பார்க்கிறார், ஒரேகாதினால் கேட்கிறாரென்றும் போதிக்கிறது. பொதுவாக ஆண்கள் ஒருபக்கமும் பெண்கள் ஒருபக்கமுமாக ஆலயத்தில் உட்காருகிற வழக்கமுண்டு. சில ஆராதனைகளின் மத்தியில், பரி. பவுல் நிருபங்களில் எழுதியிருக்கிறபிரகாரமாக, 'சமாதானத்தின் வாழ்த்துதல்,' அல்லது 'சமாதானத்தின் முத்தம்' என்பவைகளுக்குக் குறிப்பாக, ஒருவரையொருவர் அணைக்கிறதுபோல தழுவிக்கொள்ளுகிறார்கள். பரி. பவுல் சொல்லுகிற பரிசுத்த முத்தத்திற்கு இது நல்ல அடையாளமே. மேற்கண்ட கிறிஸ்தவ வகுப்பாரைத் தவிர, ஜேக்கபைட்காரர் என்று அழைக்கப்படுகிற யாக்கோபு கிறிஸ்தவர்களும் நெஸ்தோரிய கிறிஸ்தவர்களுமுண்டு. ஸபியர்கள் என்று அழைக்கப்படுகிற மற்றொரு வகுப்பாரு மிருக்கிறார்கள். இவர்களைக் கிறிஸ்தவர்களென்று திட்டமாகச் சொல்லமுடியாது. யோபின் புஸ்தகத்தில் இவர்கள் பேர் சொல்லப்பட்டிருக்கிறது. இவர்கள் பரி. யோவான்ஸ்நானகனுடைய பின்னடியார்கள். தண்ணீர் ஓட்டமுள்ள இடங்களில்தான் வாசம்பண்ணவேண்டுமென்று சொல்லுகிறார்கள். இவர்கள் வெள்ளி சாமான்கள் செய்வதில் பேர்போனவர்கள். ஏதேன் தோட்டத்தில் ஆதாம் ஏவாள் பேசின பாஷையைத் தாங்கள் பேசுவதாகச் சொல்லுகிறார்கள். ஆண்கள், பெண்களைப்போல நீண்டமுடி வளர்க்கிறார்கள். ஆண்களும் பெண்களும் அதிக சௌந்தரியமுள்ளவர்கள். அப்படியே, மெசொப்பொத்தாமியாவிலுள்ள மற்ற ஜனங்களும் அழகான ரூபமுள்ளவர்கள். நிறத்திலும், மேனியிலும், பொதுவாக இந்தியர்களை விட விசேஷித்தவர்கள்.

நாம் பழைய ஏற்பாட்டில் பார்க்கிறபிரகாரமாகவே, அத்தேசத்திலுள்ளவர்களின் ஆசாரங்களும் ஒழுங்குகளும், தற்காலத்திலும் அதே வண்ணமாயிருக்கின்றன. ஆதிகாலத்தில் ரெபெக்காள் குடத்தைத் தோள்மேல் வைத்துக்கொண்டு தண்ணீர்மொள்ள வந்தவிதமும், ராகேல் தன் தகப்பன் ஆடுகளை ஓட்டிக்கொண்டு வந்தவிதமும், தற்காலத்தில் அங்குள்ள பெண்கள்மூலமாய்ப் பார்க்கலாம். அப்படியே யாக்கோபு மெசொப்பொத்தாமியாவிலுள்ள பதான் ஆராமுக்கு வந்ததும், அங்கு ஆரான் ஊராரைச் சந்தித்ததும், தன் மாமனாகிய லாபானின் ஆடுகளை மேய்த்ததுமான காட்சிகள், 'உள்ளங்கை நெல்லிக்கனிபோல்' மனதுக்கு பரிஷ்காரமாய்த் தோன்றுகிறது. இது நிற்க, இவ்விதமான நமது வேதசரித்திரத்தின் பற்பல படங்களை இந்தியாவிலுள்ள கிறிஸ்தவ பள்ளிக்கூடங்களில் பார்த்த

ஒரு ஹிந்து வா[illegible], [illegible]மெசொப்பொத்தாமியாவிலுள்ளவர்கள்
அப்பாவனையாகவே காணப்படுகிறதைப் [illegible]ாாதது ஆ[illegible]
கிறிஸ்துமார்க்கமே மெய்யான மார்க்கமென்று விசுவாசித்து ஞான ஸ்நானம் பெற்றான்.

அங்குள்ள யூதஸ்திரீகள் வெளியே புறப்படும்போது, தங்கள் சிரசுக்கு முக்காடிட்டுக்கொண்டு, முகத்தையும் ஒரு சிறிய சால்வையினால் மூடிக்கொள்ளுகிறது வழக்கம். இந்த ஒழுங்கை ஆதிகாலத்தில் ரெபெக்காளிடத்தில் பார்க்கலாம். ஆனால் வேதத்தில், 'அவள் ஈசாக்கைப் பார்த்தவுடன் முக்காடிட்டுக்கொண்டாள்' என்று சொல்லப்பட்டிருக்கிறது. தலையை மூடிக்கொண்டாள் என்று அர்த்தமல்ல, முகத்துக்கு முக்காடிட்டுக்கொண்டாள் என்று பொருள்படுகிறது.

அங்குள்ள கிறிஸ்தவர்களின் வெளி ஆசாரங்களைப்பற்றிச் சொல்லவேண்டுமானால், அவர்களுடைய நடை, உடை, பாவனைகள் இந்திய கிறிஸ்தவர்களைவிட விசேஷமாகக் காணப்படுகிறது. ஆனால் அவர்களுடைய உள்ளான கிறிஸ்தவ பக்தியைப்பற்றி நான் திட்டமாய்ச் சொல்லமுடியாது என்றபோதிலும், பொதுவாய் கவனிக்குங்கால் அவர்களுடைய ஆராதனை முதலியவைகள் அதிக உற்சாகத்தைக் கொடுக்கவில்லை.

கடைசியாக அத்தேசத்துக் கிறிஸ்தவர்களிடத்திலிருந்து நாம் கற்றுக்கொள்ளக்கூடிய சில படிப்பினைகள் யாதெனில் :—

(1) அவர்கள் துருக்கிய ராஜாங்கத்தின்கீழ் இருந்தாலும், தாங்கள் கிறிஸ்தவர்களென்று அறிக்கையிட கிஞ்சித்தேனும் பயப்படவில்லை. மார்க்க சம்பந்தமாக, என்ன துன்பம் நேரிட்டாலும், ரத்தம் சிந்துமட்டும் எதிர்த்துநின்றார்கள்.

(2) அவர்களுக்குள் ஜாதிபேதமில்லை. கிறிஸ்தவர்கள் என்றால் எல்லாரும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்களைப்போல் ஐக்கியப்பட்டிருக்கிறார்கள்.

(3) தங்களுடைய சொந்த உத்தியோகத்தோடு, பரி. பவுலைப்போல, ஒரு கைத்தொழிலும் கற்றிருக்கிறார்கள். அந்த கைத்தொழிலைச் செய்வதற்கு அவர்கள் வெட்கப்படுகிறதில்லை. நான் ஒரு ஆர்மீனிய உத்தியோகஸ்தனைச் சந்தித்துப் பேசினபோது, தன் உத்தியோகத்தோடுகூட தன் நல்லதகப்பன் தனக்கு செருப்புதைக்கும் வேலையையும் கற்றுக்கொடுத்தாரென்று அதிக ரம்மியமாய்ப் பேசினார். ஆனால் ஆண்கள் வண்ணார் வேலையைமாத்திரம் செய்யார்கள் அவ்வேலை பெண்களுக்குரியது.

அங்குள்ள துருக்கிய ராஜ்யத்தினிமித்தம் மகம்மதியருடைய மத

[illegible] பகிரங்கமாய்க் கிறிஸ்தவர்கள் வைராக்கியத்தி[illegible] சங்கத்தைத் தடையாயிருக்கிறது. கடவுளுக்குச் சித்தமாய் அத்தேசம் [illegible] ராஜாங்கத்தின்கீழ் வந்தபின், மெசொப்பொத்தாமியாவில் கிறிஸ்துமார்க்கம் விர்த்தியடைவதற்குச் சந்தேகமில்லை. இச்சமயம் வருங்கால், இந்தியாவுக்கும் மெசொப்பொத்தாமியாவுக்கும், இப்போதிருக்கிறதைவிட போக்கும் வரத்தும் அதிகமாகி, வியாபார முதலியவை விர்த்தியடைவதுடன், இந்திய கிறிஸ்தவர்களாகிய நமது மூலமாய் மெசொப்பொத்தாமியாவிலுள்ளவர்களுக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும் சிலாக்கியத்தை நமது சபாநாயகராகிய இயேசு ரட்சகர் ஏற்றகாலத்தில் தந்தருளுவாராக. ஆமென்.

M. D. Israel.

LESSONS FOR FAMILY WORSHIP

வேத வாசிப்பு ஒழுங்கு

1918-ஆம் செப்டெம்பர்மீ

1	ஞா.	2 இரா.	2. 1—15	11	பு.	2 இரா.	7. 1—11	21	ச.	2 இரா.	18. 17—25
2	தி.	„	3. 1—12	12	வி.	„	7. 12—20	22	ஞா.	„	19. 5—20
3	செ.	„	3. 13—27	13	வெ.	„	11. 1—10	23	தி.	„	20. 1—17
4	பு.	„	4. 1—17	14	ச.	„	11. 11—21	24	செ.	„	21. 1—16
5	வி.	„	4 18—30	15	ஞா.	„	12. 1—15	25	பு.	„	22. 1—10
6	வெ.	„	4. 31—44	16	தி.	„	13. 14—25	26	வி.	„	22. 11—20
7	ச.	„	5 1—14	17	செ.	„	14. 1—14	27	வெ	„	23. 1—14
8	ஞா.	„	5. 15—27	18	பு.	„	17. 6—18	28	ச.	„	23 15—25
9	தி.	„	6. 1—12	19	வி.	„	17. 24—36	29	ஞா.	„	24. 1—15
10	செ.	„	6. 13—25	20	வெ.	„	18. 1—16	30	தி.	„	25. 1—17

C. L. S. PRESS, MADRAS—1918